## கொரோனாவைரஸ் என்றால் என்ன?

- கொரோனாவைரஸ் என்பது சாதாரண தடிமல் முதல் மத்திய கிழக்குச் சுவாச நோய்க்குறி (MERS) மற்றும் மிகத் தீவிரமான சுவாச நோய்க்குறி (SARs) வரையான கடும் நோய்களை தோற்றுவிக்கும் வைரஸ்களின் ஒரு பெரிய குடும்பமாகும்.
- புதிய கொரோனாவைரஸ் nCoV என்று அழைக்கப்படுகின்றது.
- தற்போது நிலவும் புதிய கொரோனாவைரஸ் 2019-nCoV என்று அழைக்கப்படுகின்றது

## கொரோனாவைரஸ் நோயின் அறிகுறிகள் யாவை?



- காய்ச்சல், இருமல், மூச்சுத் திணறல், சுவாசிக்கக் கஷ்டப்படுதல் என்பனவே இந்த நோயின் பொதுவான அறிகுறிகளாகும்.

## கொரோனாவைரஸ் எங்கிருந்து வருகின்றது?

- கொரோனாவைரஸ் விலங்கினங்களிடையே பரவுகின்ற தன்மை கொண்டது.
- அறியப்பட்ட பல கொரோனாவைரஸ்கள் விலங்குகளில் காணப்பட்டாலும் மனிதர்களுக்கும் விலங்கினங்களிடையேயும் தொற்றக்கூடிய திறன் கொண்டவை.
- விலங்கினங்களில் உள்ள வைரஸ்கள் மனிதருக்குத் தொற்றும்போது அச் செயற்பாட்டை மிகை வழிதல் என்று கூறுகின்றோம்.

## கொரோனாவைரஸிலிருந்து நான் என்னைப் பாதுகாத்துக்கொள்வது எப்படி?




- கொரோனாவைரஸ்கள் பெரும்பாலும் சுவாச அறிகுறிகளை ஏற்படுத்தும். இதனால் நாம் அடிப்படைக் கைச் சுகாதாரத்தைப் பரிந்துரைக்கின்றோம்.
- சவர்க்காரமும் நீரும் கொண்டு உங்கள் கைகளைக் கழுவவும்.
- இருமும்போது அல்லது தும்மும்போது உங்கள் வாயையும் மூக்கையும் மடித்த முழங்கை கொண்டு மறைக்கவும்.
- தடிமல் அல்லது சளிச்சுரம் ஏற்பட்டவர்களுடன் உரிய பாதுகாப்பின்றி நெருங்கிப் பழகுவதைத் தவிர்க்கவும்.
- பண்ணை அல்லது வன விலங்குகளுடனான பாதுகாப்பற்ற தொடர்பைத் தவிர்க்கவும்.
- உங்கள் உணவுகளை, குறிப்பாக இறைச்சி உணவுகளை நன்கு சமைத்து உண்ணவும்.

## இந்த நோய்க்குச் சிகிச்சை உண்டா?



- இதுவரை, கொரோனாவைரஸ் நோய்க்கு குறிப்பான சிகிச்சை எதுவும் கிடையாது. ஆனால், நோய் அறிகுறிகளுக்கு சிகிச்சை பெறலாம்.

## அன்ரிபயோட்டிக் மருந்துகளினால் 2019-nCoV நோயைத் தடுக்க அல்லது குணப்படுத்த முடியுமா?

- முடியாது. அன்ரிபயோட்டிக் மருந்துகளினால் வைரஸ்களை அழிக்க முடியாது. 2019-nC0V என்பது வைரஸ் ஆகும். எனவே, இந்த நோயைத் தடுப்பதற்கு அல்லது குணப்படுத்துவதற்கு அன்ரிபயோட்டிக் மருந்துகளைப் பயன்படுத்தக் கூடாது.

## 2019-nCoV வைரஸ் தாக்குவது வயதானவர்களை மட்டுமா அல்லது இளவயதினரும் பாதிக்கப்படுவார்களா?



- எந்த வயதினருக்கும் இந்த வைரஸ் தொற்றக்கூடும். வயதானவர்கள் மற்றும் ஏற்கனவே வேறு நோய்களைக் கொண்டுள்ளவர்கள் இதனால் இலகுவில் பாதிக்கப்பட்டுக் கடும் சுகயீனத்திற்கு ஆளாவார்கள்.

## வீட்டிலுள்ள செல்லப் பிராணிகளினால் 2019-nCoV பரப்பப்படுமா?

- நாம் வளர்க்கும் நாய்கள், பூனைகள் போன்ற பிராணிகளுக்கு இந்த வைரஸ் தொற்றக்கூடும் என்பதற்கு உறுதியான சான்றுகள் தற்சமயம் கிடையாது. எனினும், செல்லப் பிராணிகளைத் தொட்ட பின் சவர்க்காரமும் நீரும் கொண்டு கைகளைக் கழுவுவது எப்போதும் மிக நல்லது.

World Health Organization
Sri Lanka